
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

Translated from BS 889
Published on July 7, 2015

பொருளடக்கம்

உங்கள் பாவங்களை மறைக்காது அறிக்கை செய்து விட்டுவிடுங்கள் ......... 2

கேள்வி–பதில் .................. 12

BS Tamil Version - 29 2015

# உங்கள் பாவங்களை மறைக்காது அறிக்கை செய்து விட்டுவிடுங்கள்

எல்லாரும் பாவஞ்செய்திருக்கிறார்கள்




"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." நீதி. 28 : 13.

**நா**ம் தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், பாவ அறிக்கை செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என பரிசுத்த வேதாகமத்தில் திரும்பத் திரும்பக் கூறப் பட்டுள்ளது. நமதாண்டவர் தம்முடைய சீஷர்களுக்குத் தந்த மாதிரி ஜெபத்தில் காணப்படும் ஏழு விண்ணப்பங்களில் இதனையும் ஒன்றாக சேர்த்துள்ளார். (மத். 6 : 12; லூக். 11 : 4). பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய ஜனங்களும், மற்றவர்களும், தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்றுக் கொள்வதற்குத் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து, விட்டுவிட்டு, தேவனிடத்திற்கு அவர் நியமித்துள்ள வழியில் வரவேண்டும். ஏனெனில் "**எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாயிருக்கிறார்கள்.**" (ரோம. 3 : 23). நம்முடைய விழுந்து போன அல்லது தவறிப்போன நிலைமை காரணமாக நாம் தினமும் பாவஞ் செய்கிறவர்களாக இருக்கிறோம். "**நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.**" (1 யோவா. 1 : 8-10).

கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்வதற்காக யோவான் ஸ்நானகன் மனந்திரும்புதலைப் பற்றி பிரசங்கித்தான். "**அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்று புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.**" (மத். 3 : 5, 6). "**கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்திலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.**" (லூக். 24 : 46, 47). "**இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.**" (அப். 17 : 30). பழைய ஏற்பாட்டுக் காலங்களிலும் விசேஷமாக விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்ட பிரதிஷ்டை செய்துள்ள ஜனங்களுக்கும், பாவத்தை அறிக்கை செய்து விட்டு விடுமாறு கட்டளை கொடுக்கப்பட்டது.

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*


## தாவீது தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தான்

தாவீது மிகப் பயங்கரமான பாவங்கள் சிலவற்றை நடப்பித்தான். அவன் அவற்றைத் தேவனுக்கு முன்பாக மறைக்காமல் அறிக்கை செய்து, தேவனுடைய மன்னிப்புக்காக முழு மனதோடு வேண்டுதல் செய்தான். நேரிடவிருந்த இயேசுவின் மரணம் அவனுக்காகவுமானபடியால், தேவன் அவனை மன்னித்து, தம்முடைய பார்வையிலிருந்து அவனுடைய பாவங்களை மூடிப் போட்டார். ஏனெனில் தேவன் ["**அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த**" (எபே. 2 : 1)] "**மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவராயிருக்கிறார்.**" (ரோம. 4 : 17). தாவீது உரியாவுக்கு விரோதமாக விபச்சாரமும் கொலையுமாகிய பெரிய பாவத்தைச் செய்தபோது, தேவன் அவனைத் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் மூலம் கடுமையாகக் கடிந்து கொண்டார். தாவீதும் மனங்கசந்து, "**நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன்**" என்றான். "**நீ சாகாதபடிக்குக் கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்.**" (2 சாமு. 12 : 13) என்று நாத்தான் அவனைத் திடப்படுத்தினான். ஜனங்களைத் தொகையிடச் செய்த தாவீதின் பாவம் சம்பந்தமாக, அவனுடைய இருதயம் அவனை வாதித்தது. அவன் "**கர்த்தரை நோக்கி நான் இப்படிச் செய்ததினால் பெரிய பாவஞ் செய்தேன். இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும். நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்.**" (2 சாமு. 24 : 10). திரும்பவும் அவனுக்கு மன்னிப்பு அருளப்பட்டது. ஆயினும் இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவனுடைய பாவங்களுக்காக அவன் தண்டிக்கப்பட்டான்.

51-வது சங்கீதத்தில் தாவீது செய்த அற்புத மான பாவ அறிக்கை ஜெபத்தினை நாம் அனைவரும் பயன்படுத்தலாம். தன் மீது தேவன் இரக்கம் பாராட்டி, தன்னுடைய மீறுதல்களை நீக்கி, தன்னுடைய பாவத்திலிருந்து தன்னைச் சுத்திகரித்து, தன்னை அவருடைய சமூகத்தை விட்டுத் தள்ளிவிடாமலும், தன்னிடமிருந்து அவருடைய பரிசுத்த ஆவியை எடுத்துவிடாமலுமிருந்து, தன்னை இரத்தப்பழிக்கு நீங்கலாக்கிவிட்டு, தேவனுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தைத் திரும்பவும் தந்தருள வேண்டு மென்று எவ்வளவாக அவன் வேண்டுதல் செய்தான்! தேவன் கிருபையாக அவனுடைய ஜெபத்திற்கு செவி கொடுத்தார். அவனுடைய மனவேதனையை வச. 14-ல் நாம் உணர முடிகிறது. "**தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்,**" என்ற அவனுடைய ஜெபத்திற்குத் தேவன் கிருபையாகப் பலனளித்தார். அதுபற்றி சாட்சியாக அவன் 32-வது சங்கீதத்தில் "**எவனுடைய பாவம் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ** (வரப்போகும் மேசியாவின் மீட்கும் பொருளின் புண்ணியத்தால் தேவனுடைய பார்வை யிலிருந்து) **அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்.**" (சங். 32 : 1, 2) எனக் கூறுகிறான். "**ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்குச் சித்தமானவை களையெல்லாம் அவன் செய்வான்.**" (அப். 13 : 22) என்று அவனைக் குறித்துத் தேவனும் சாட்சி பகர்ந்துள்ளார்.

## தானியேலின் பாவ அறிக்கை

தானியேல் உயர்வான குணமுடைய உண்மையுள்ள தேவ மனுஷனாவான். பரிசுத்த வேதாகமத்தில் அவனைக் குற்றப்படுத்துகிற, அல்லது கண்டிக்கிறதான வார்த்தை ஒன்று கூட கிடையாது. எனினும் மனஸ்தாபப்பட்டு ஜெபிக்க வேண்டிய காலம் ஒன்று தானியேலுக்கும் அவசியமாயிற்று. அவன் தனக்காகவும், தன்னுடைய தேசத்திற்காகவும் உபவாசித்து, பாவ அறிக்கை செய்து ஜெபித்தான். அது குறித்து தானி. 9 : 3-6-ல் பின்வருமாறு அவன் கூறுகிறான்: "**நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி, ஆ, ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள் ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான** (பயபக்திக் குரியவருமான) **தேவனே, நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரராயிருந்து துன்மார்க்கமாய் நடந்து, கலகம் பண்ணி, உம்முடைய கற்பனைகளையும், உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்று போனோம். உமது நாமத்தினாலே எங்கள் இராஜாக்களோடும் எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தின் சகல ஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்குச் செவி கொடாமற்போனோம்.**"




மேலும் தானி.9-வது அதிகாரத்தின் மீதமான பாகத்தை கண்டிப்பாக வாசித்து, தானியேல் எவ்வாறு தன்னுடைய பாவங்களையும், தன்னுடைய ஜனங்களின் பாவங்களையும் அறிக்கை செய்தான். "**இப்படி நான் சொல்லி, ஜெபம் பண்ணி, என் பாவத்தையும், என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக் கொண்டிருந்தேன்**" (வச. 20) என்பதையும், அந்த அதிகாரத்திலும், அதற்குப் பிந்திய அதிகாரங்களிலும் குறிப்பிட்டுள்ளதின்படி தேவன் எவ்வளவு ஆச்சரியமான விதமாக அவனுடைய ஜெபத்திற்குப் பதிலளித்தார் என்பதையும் கவனிக்கவும். இவ்வாறு அவன் அறிக்கை செய்ததினால் "**பிரியமான புருஷனாகிய தானியேல்**" என்று கர்த்தருடைய தூதனாலும் அவன் அழைக்கப்பட்டான். (தானி. 10 : 11). கர்த்தருடைய தயவில் தானியேல் மிகவும் உயர்ந்தவனாக இருந்தான்.

## நெகேமியாவின் பாவ அறிக்கை

நெகேமியா இஸ்ரயேலின் யூதா கோத்திரத்தான். தேவனுடைய ஜனங்களைப் போதித்து பக்தி விருத்தியடையச் செய்வதற்காக தெய்வீகப் பரிபாலனத்தினால் வழிநடத்தப்பட்டு இந்த சரித்திர (வரலாற்று) புத்தகத்தை அவன் எழுதினான். தன்னுடைய விண்ணப்பங்கள் அனைத்தின் வார்த்தைகளையும் நெகேமியா நமக்கு எழுதிவைக்கவில்லை. ஏனெனில் எழுதியுள்ள விவரத்திலிருந்து, அவன் இவ்விதமாக நான்கு மாதங்கள் ஜெபித்தான் என்று நாம் அறிகிறோம். அதற்குப் பின்னர் தான் அவனுடைய ஜெபத்திற்கு உத்தரவு கிடைக்க ஆரம்பித்தது. தான் இடைவிடாது ஜெபித்த அந்த நான்கு மாதங்களில், பல்வேறு சமயங்களில், பற்பல விதங்களில், அவன் விண்ணப்பித்துக் கொண்டு வந்த காரியங்களின் பொதுவான சுருக்கத்தையே அவன் கூறியுள்ளான். (நெகே. 2 : 1-க்கான விரிவான வேதாகம விளக்கத்தைப் பார்க்கவும்). எருசலேமிலும், சொந்த நாட்டின் இதரவிடங்களிலுமிருந்த வருந்தத்தக்க நிலைமைகளை அவன் கேட்டதும், "**உட்கார்ந்து, அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கிப் பிரார்த்தித்தான்.**" (நெகே. 1 : 4). தன்னுடைய தினசரிக் கடமைகளை அவன் கவனித்துக் கொண்டிருந்தாலும், "**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே ..... இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் கவனித்தும் இருப்பதாக**" என்று இரவும் பகலும் (வச. 5, 6) அவனுடைய இருதயத்தில் அவ்விதம் ஜெபித்துக் கொண்டுமிருந்தான்.

தகுந்த பயபக்தியோடும், தம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குத் தேவன் தம்முடைய மகத்துவத்தையும் அன்பையும் இரக்கங்களையும் அருளிச் செய்கிறவர் என்பதை அறிக்கை செய்தும், (வச. 5, 6) அவன் தேவனை நோக்கி, "**நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ் செய்தோம். நாங்கள் உமக்கு முன்பாக மிகவுங்கெட்டவர்களாய் நடந்தோம். நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதே போனோம்**" (வச. 7) என்று நெகேமியா மன்றாடினான்.

இவ்விதமாக நெகேமியா ஜெபிக்கையில், அவன் மோசே, தீர்க்கதரிசிகள் மற்றும் இராஜாக்கள் ஆகியோரை சென்ற காலத்தில் தேவன் நடத்தின விதங்களைப் பற்றின சாட்சிகளாகிய அவருடைய வார்த்தையை தன் மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தான். உடன்படிக்கையின் தம்முடைய பங்கை நிறைவேற்றுவதில் தேவன் தவறிவிட்டார் என்று அவர்மீது அவன் குறைபட்டுக் கொள்ளவில்லை. மாறாக இஸ்ரயேலருடன் தேவன் என்றுமே நீதியாகவும் உண்மையாகவும் நடந்து கொண்டார் என்பதையும், ஒரு ஜாதியாக அவர்கள் அப்பொழுது அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங்கள் யாவும், சீனாய் உடன்படிக்கையின் மீறுதல்களுக்காக அவர்களுக்கு




ஏற்பட்ட நியாயமான தண்டனையேயாகும் என்பதையும் அவன் ஒப்புக் கொண்டான். மேலும் தேவன் தம்முடைய உடன்படிக்கையைக் காத்து தம்முடைய ஜனங்கள் அல்லது அவர்களில் தம்முடைய வழிகளில் நடக்க விரும்புகிறவர்கள் மீது இரக்கமாயிருப்பார் என்ற தன்னுடைய நம்பிக்கை யையும் அறிக்கைச் செய்தான்.

மகா பெரிய சிருஷ்டி கர்த்தாவின் ஆசீர் வாதங்களுக்காக அவரைக் கிட்டிச் சேருகிற, தவறி விழுந்துபோன ஆதாமின் சந்ததியைச் சேர்ந்தவன் எவனும், தன்னுடைய பெலவீனம், தேவை, குறைபாடு, பாவம் முதலியனவற்றை எவ்விதத்திலாவது ஒப்புக் கொள்ளாது, ஏற்ற பிரகாரமாக தன்னுடைய விண்ணப் பத்தை ஏறெடுப்பதென்பது கூடாத காரியமாகும். நெகேமியா மிகவும் பகிரங்கமாகத் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தான். தேவனிடத்தில் சேர விரும்புகிற எவருக்கும் இருக்க வேண்டிய தகுதி அவ்வித மனோ நிலையேயென பரிசுத்த வேதாகமம் குறிப்பிடுகிறது. “**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்.**” (நீதி. 28 : 13) மூடி மறைத்து, மனஸ்தாபப்பட்டு அறிக்கை செய்யப்படாத பாவம், மனச்சாட்சியில் குற்றப்படுத்தப்படாத பாவம், மனந்திரும்புதலுக்கேற்ற கண்ணீர் விடாத பாவம், மற்றவர்களைக் காரணம் காட்டும் பாவம், சாக்கு போக்கு சொல்லி, தன்னைத் திருப்தி செய்யும் பாவம் அல்லது தன் பார்வைக்கு நியாயமாகத் தோன்றும் பாவம் ஆகியவை என்றுமே தேவனுடைய இரக்கத் தையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவராது.


## அறிக்கை செய்யப்படாத பாவங்களின் தீமைகள்

அறிக்கை செய்யப்படாத பாவங்களில் தீமையும் கெடுதியும் அதிகமாக இருக்கின்றன. தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்யாத ஒரு கிறிஸ்தவனுக்கு ஏற்படும் தீமைகள் சிலவற்றை நாங்கள் இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

**(1) அறிக்கை செய்யப்படாத பாவங்கள் தேவனால் மன்னிக்கப்படுகிறதில்லை:**

பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு, இயேசுவை நம்முடைய இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டு (“**வேத வாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்த**” – 1 கொரி. 15 : 3) கிறிஸ்து வின் மூலமாக நாம் முதலாவதாகத் தேவனிடத்திற்கு வந்தபோது, நமக்காகச் சாட்டப்பட்ட கிறிஸ்துவின் தியாகப் பலியின் புண்ணியத்தின் மூலமாக நாம், “**பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமாய்**” (ரோம.12 : 1; 5 : 1; 2 : 1; எபி. 9 : 24) எண்ணப்பட்டோம். இவ்வித மாய் நாம் “**இலவசமாய் அவருடைய** (தேவனுடைய) **கிருபையினாலே, கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்பட்டோம். தேவன் பொறுமை யாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாக..... கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரப் பலியாக அவரையே ஏற்படுத்தினார்.**” (ரோம. 3 : 24-26). அவ்வாறு நம்முடைய முந்தின காலத்து பாவங்கள் எல்லாம் மன்னிக்கப் பெற்று, கிறிஸ்துவின் நீதியாகிய வஸ்திரம் தரிப்பிக்கப் பெற்றோம்.

ஆனால் இது நம்மை நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களென நிரூபிக்கிறதில்லை. அதற்குப்




“நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ள வராயிருக்கிறார்.” 1 யோவா. 1 : 8,9.

பாத்திரவான்கள் என நாம் ஒப்புக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக நாம் முற்றிலுமாகப் பரீட்சிக்கப்பட வேண்டும். மேலும் அவ்வப்போது ஏற்படுகிற பாவங்களுக்காகவும், அவ்வாறு நாம் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள நாட வேண்டும். நாம் பிரதிஷ்டை செய்து, ஏற்றுக் கொள்ளப்படுகிறதான காலம், நம்முடைய பந்தய ஓட்டத்தின் முடிவையல்லாது, அதின் ஆரம்பத்தையே குறிப்பிடுகிறது. தவறிப்போன நிலைமை காரணமாக பாவம் எப்பொழுதும் நம்மில் தங்கியிருக்கிறதை நாம் காண்கிறோம். "**நமக்குப் பாவம் இல்லை என்போமாகில் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.**" (1 யோவா. 1 : 8, 9). அறிக்கை செய்யப்படாத பாவங்கள் மன்னிக்கப்படாத பாவங்களாகுமென்று இதிலிருந்து நாம் அறிகிறோம். அவை இன்னமும் நமக்கு விரோதமாக இருக்கின்றன.

"**ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக,**" (ரோம. 6 : 12) என்ற புத்திமதியைக் கவனிக்கவும். பாவத்திற்கு எதிராக நாம் எப்பொழுதும் போர் செய்து கொண்டு இருக்க வேண்டும். மற்றபடி அது நம்மைத் தன்னுடைய ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து ஆண்டு கொள்ளும். தேவன் பாவத்தை வெறுக்கிறார். அவ்வாறே நாமும் அதை வெறுக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். "**ஒருவன்** (அதாவது பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய ஜனங்களில் யாராவது ஒருவன்) **பாவஞ் செய்வானானால்** (அதாவது பெலவீனம் காரணமாகப் பாவத்திற்குள் விழுந்து போவானானால்) **நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப்** (பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய ஜனங்களுக்காக) **பிதாவினிடத்தில்** (எதிர்பார்த்தபடி) **பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.**" (1 யோவா. 2 : 1). அவர், "**பரலோகத்தில் தானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.**" (எபி. 9 : 24). "**தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்: நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே** (இயேசுவே)" (ரோம. 8 : 34). நமக்காகத் தினமும் கிறிஸ்து பரிந்து பேச வேண்டியது அவசியமாகும். ஏனெனில் நம்முடைய மாம்சத்தில் "**நன்மை வாசமாயிருக்கிறதில்லை.**" தீமை எப்பொழுதும் நம்மில் குடிகொண்டிருக்கிறது. (ரோம. 7 : 14-21). எனவே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப் படத்தக்கதாக அவற்றை அறிக்கை செய்கிறதை நாம் அலட்சியம் செய்யாதிருப்போமாக.

### (2) அறிக்கை செய்யப்படாத பாவங்கள் நம்மை விட்டு நீங்கிப் போகிறதில்லை:

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டால் மாத்திரம் போதாது. அவற்றை நாம் விட்டு விடவும் வேண்டும். அவை நம்மை விட்டு நீக்கிப் போடப்பட வேண்டும். "**தன்னுடைய பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**" "**பாவிகளே உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.**" (யாக். 4 : 8). நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நித்திய ஜீவனாகிய ஈவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் (ரோம. 6 : 23). இயேசு செய்தது போன்று, நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். (எபி. 1 : 9). நமது விழுந்துபோன சுபாவங்களில் பாவம் மிகவும் ஆழமாகப் பதிந்திருக்கிறது. எனவே "**அந்தப் பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுவதற்கு**" (1 கொரி. 5 : 7). நாம் வெகுவாக முயற்சி செய்ய வேண்டும். நம்மில் அன்பு கூருகிற பரம பிதா நமக்கு, "**இன்னது தேவையென்று அறிந்திருக்கிறார்.**" (மத். 6 : 8). ஆகவே நம்முடைய சீர்திருத்தத்திற்கான சிட்சைகளை நமக்களிப்பது அவசியமென அவர் சில சமயங்களில் காண்கிறார். அவ்வித சிட்சைகள், நாம் பாவங்களை விட்டு விட்டு அவருக்குப் பிரியமான குணசீலங்கள் நம்மில் வளர நமக்கு உதவுகிறதாக இருக்கின்றன. (எபி. 12 : 5-11). நாம் முன்பு கவனித்ததின்படி, தேவன் தாவீதை மன்னித்த பின்பு, அவனுடைய சீர்திருத்தத்திற்காக அவனைத் தண்டித்து, சிட்சித்தார். இவ்விதமாக, அவன் பாவஞ் செய்கிறதற்குக் காரணமாயிருந்த தீமையை அவன் தன்னிடமிருந்து நீக்குவதற்கு அந்த சிட்சை உதவியாக இருந்தது. சத்தியத்தின் ஊழியக்காரனானவன் தான் செய்த தவறை சரிசெய்வதோடல்லாமல் அந்தத் தவறு வருவதற்கு காரணமாயிருந்த தன்னுடைய குணசுபாவத்திலுள்ள தீமையான தன்மைகளை வேரறுக்கவும் வேண்டும். நம்முடைய நிறைவேறுதலான குற்ற நிவாரண பலிகளைத் தேவனுக்குச் செலுத்துவதில் நாம் உண்மையுள்ளவர்களாயிருப்போமாக. அவ்வாறே நம்முடைய சுபாவங்

களில் அதிகமாகவோ அல்லது கொஞ்சமாகவோ குடியிருந்து, நாம் பாவஞ்செய்கிறதற்குக் காரணமாக இருந்த இந்த தீமையான குண பண்புகளை நம்மைவிட்டு நீக்கிப் போடுவதற்கேதுவாக விழித் திருந்து, ஜெபித்து, சுத்திகரித்து, போரிட்டு நிலைத் திருத்தலாகிய கடுமையான ஒழுங்கு முறைகளை அனுஷ்டிப்பதிலும் நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமாக. (லேவி. 5).

அறிக்கை செய்யப்படாத பாவங்கள் நீக்கப்பட்டு சுத்தமாக்கப்படுவதில்லை என்பதற்கு ஓர் உதாரணமாக, அதிகார வெறிபிடித்து தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிற பாவத்தை நாம் கவனிப்போம். அதிகார ஆசையென்கிற பாவம் செய்கிறதை அநேகர் உணர்ந்து கொள்கிறதில்லை! மூப்பர்கள், உதவிக்காரர்கள், மற்றும் சத்தியத்திற்கான விசேஷித்த உதவியாளர்கள் மட்டுமின்றி, ஊழியர் களாகத் தெரிந்து கொள்ளப்படாத சகோதரர்கள் கூட இந்தப் பாவத்தைச் செய்கிறார்கள் என்றும் அவர்கள் அறிந்து கொள்கிறதில்லை. சகோதரிகளும், பிள்ளை களுங்கூட இந்தப் பாவத்தைச் செய்யக்கூடும். அதாவது குடும்பத்தலைவனாக தேவனால் அங்கீகாரம்பெற்ற கணவனோ, அல்லது தகப்பனோ வகிக்க வேண்டிய பதவியையோ அந்தஸ்தையோ அல்லது அவனுக்குரிய தனி உரிமைகளையோ தங்களுக்கென எடுத்துக் கொள்ள நாடுவதான பாவம் அது.

அதிகார ஆசையையும், இறுமாப்பாய் ஆளுவதையும் பரிசுத்த வேதாகமம் கண்டனஞ் செய்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு, “**உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்.... ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**” (1 பேது. 5 : 2, 3, 6) என்று மூப்பர்களுக்குப் புத்திமதி கூறுகிறார். தியோத்திரேப்பு “**அவர்களில் முதன்மையாக இருக்க விரும்பினபடியால்**” (3 யோவா. 9, 12). அப்போஸ்தலனாகிய யோவான் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய ஜனங்களை மேற்கொள்ளும் அல்லது அவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் சாத்தானின் கூட்டம் என்று நிக்கொலாய் மதஸ்தரைக் குறித்து நமதாண்டவர் எச்சரிக்கிறார். (வெளி. 2 ; 6, 15). தேவன் மோசேயின்




“அதின் நடுவில் இருக்கிற அதின் பிரபுக்கள் இரை கவ்வுகிற ஓநாய்களைப் போல் இருக்கிறார்கள்; அநியாயமாய்ப் பொருள் சம்பாதிக்கிறதற்கு இரத்தஞ்சிந்துகிறார்கள், ஆத்துமாக் களைக் கொள்ளையிடுகிறார்கள்.” எசே. 22 : 27


மூலமாக, “**எனக்குக் கல்லினால் பலிபீடத்தை உண்டாக்க வேண்டுமாகில், அதை வெட்டின கல்லுகளால் கட்ட வேண்டாம். அதின்மேல் உளியிட்டவுடனே, அதை அசுசிப்படுத்துவாய். என் பலிபீடத்தின் மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்,**” (யாத். 20 : 25, 26) என்று கட்டளை யிட்டார். நிறைவேறுதலில் இது அதிகார வாஞ்சைக்கு எதிராக விடப்பட்ட மனப்பூர்வமான அக்கறையுள்ள எச்சரிப்பாகும்.

விழுந்து போன சுபாவத்தின் காரணமாக ஒருவன் அதிகார ஆசையுடையவனாகி, தனக்கு நியாயமாகக்கிடைக்கக்கூடாத அதிகாரங்களையும், உரிமைகள் போன்றவைகளை அடைந்து, அவன் மற்றவர்களை இறுமாப்பாய் ஆள அந்த அதிகாரங் களை உபயோகிக்கும் நோக்கங் கொண்டுள்ளான் என்றும் வைத்துக் கொள்வோம். அது அநேகரிடத்தில் குடிகொண்டிருக்கும் “இரகசிய பாவம்” ஆகும். ஜாக்கிரதையாக விழித்திருந்து அதற்காக ஜெபித் தாலன்றி அதனை நடப்பிக்கிற ஒருவன், இப்படிப்பட்ட பாவம் தன்னுடைய சுபாவத்திலும், நடத்தையிலும் குடிகொண்டிருப்பதை அறிந்து கொள்ள முடியாது. ஒருவேளை அது இருப்பதாகத் தெரிந்தாலுங்கூட, அதனை ஒரு பாவம் என்று அறிந்து கொள்ள முடியாததாகிவிடும். எப்படியிருந்தாலும் அது நீங்கி சுத்தமாக முடியாது. ஏனெனில் முதலாவதாக அது இருப்பது அறியப்பட வேண்டும். பிறகு அதற்காக மனஸ்தாபப்பட்டு அதனை அறிக்கை செய்தாக வேண்டும். அதன் பின்னரே அதனை விட்டு விடுதலும், அது நீங்கிச் சுத்தமாக்கப்படுதலும் ஏற்படும்.

தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், பாவஞ் செய்தவன்; தன் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். அவன் தன் பாவத்தை உணர்ந்து, என் அருமைப் பிதாவே, அதிகார ஆசையினால் மற்றவர்களை இறுமாப்பாய் ஆள அதனை உபயோகிக்கும் பாவமாகிய கொடிய பாவத்தைச் செய்யும் குற்றவாளியானேன். உமக்கு இப்பாவத்தைச் செய்து உமக்கு கோபமூட்டியதற்காக மிகவும் வேதனைப்படுகிறேன். கிறிஸ்துவினிமித்தமாக என்னை மன்னித்தருளும். அவருக்கு விரோத மாகவும் நான் இவ்வாறு பாவஞ் செய்திருக்கிறேன். இந்தப் பாவத்தை நான் வெறுக்கிறேன். என்னுடைய ஆண்டவரும் தலைவருமாகிய கிறிஸ்துவின் மூலமாக எனக்களிக்கப்பட்ட உம்முடைய உதவியைக் கொண்டு இந்தப் பாவத்தை என்னை விட்டு அகற்றிவிடத் தீர்மானித்துள்ளேன். நான் இனி அதிகார ஆசை பிடித்து, மற்றவர்களை இறுமாப்பாய் ஆள விரும்பமாட்டேன். உம்முடைய பலத்த கரத்தின் கீழ் என்னைத் தாழ்த்தி அடங்கியிருப்பேன். இந்தக் கெட்ட குணத்தை என்னுடைய சுபாவத்திலிருந்து வேரோடே களைந்துவிட்டு அந்த இடத்தில் நீதியையும், பரிசுத்தத்தையும் அப்பியாசிக்க உதவி செய்தருளும்" என்று சொல்லும் அளவுக்கு அதனை வெறுக்க வேண்டும். அவ்வித ஜெபத்துக்குத் தேவன் பதிலளிப்பாரா? ஆம், சங். 34 : 18; "**நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்**" மற்றும் ஏசா. 57 : 15 "**நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர்** (யேகோவா) **சொல்லுகிறார். உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்.**"

### (3) அறிக்கை செய்யப்படாத பாவம் கிறிஸ்தவ செல்வாக்கை அழித்துப்போடும்.

"**நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.**" (1 யோவா. 3 : 4). "**அநீதியெல்லாம் பாவந்தான்.**" (1 யோவா. 5 : 17). எனவே, எவ்விதத்திலும் வேண்டு மென்று செய்யப்படாவிட்டாலுங்கூட, எல்லா மீறுதல் களும், குறைபாடுகளும், குற்றங்களும், உண்மை யிலே பாவம்தான். "**நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்**"





(யாக். 5 : 16) என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு, "**சொஸ்தமடையும்படிக்கு**" என்று மொழிப் பெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க பதம், "**சன்மார்க்கப் பிரகாரமாக அல்லது ஆவிக்குரிய பிரகாரமாக சொஸ் தமடையும்படிக்கு**" என்ற கருத்து கொண்டதாகும். அவ்வித கருத்திலே தான் அந்த பதம், "**நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு**" என்று அப். 28 : 27-ல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. (மத். 13 : 15; மற்றும் எபி. 12 ; 13-ஐயும் பார்க்கவும். அங்கும் அப்பதம் அவ்வித கருத்தில்தான் உபயோ கிக்கப்பட்டிருக்கிறது.) சாக்கு போக்குகள் சொல்லி அல்லது தங்களையே நீதிமான்கள் என்று கூறி, அல்லது பிடிவாதமாக மறுத்து, தங்கள் பாவங்களை ஒப்புக் கொள்ளாது மூடிவைக்கும் கிறிஸ்தவர்கள் தேவனைக் கனவீனப்படுத்துகிறதுடன், மற்றவர்களிடம் நல்ல முறையில் பழகக் கூடிய தங்களுடைய செல்வாக்கையும் அழித்துப்போடுகிறார்கள். மற்ற வர்கள் அற்பமாக மதிக்கக்கூடிய விசுவாசிகளின் மாதிரிகளாக அவர்கள் இருக்கிறார்கள். "**நீ வார்த்தை யிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு**" (1 தீமோ. 4 : 12) என்பது பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனை உற்சாகமூட்டுகிறது. ஒரு பொதுப் பொறுப்பிலுள்ள போதகரிடமோ அல்லது உள்ளூர் சபை மூப்பர் ஒருவரிடமோ அவ்வித தகாத நடத்தை காணப்படுமாகில், அவன் தான் ஊழியஞ் செய் கிறவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் கர்த்தருக்குள்ளான அவனுடைய வல்லமையை அது மட்டுப்படுத்தி விடுகிறது.

தன்னுடைய குற்றத்தை மற்றொருவனிடத்தில் அறிக்கை செய்வது ஒருவனுக்குக் கடினமாகக் காணப்படுமாகில், அவன் தன்னை ஜாக்கிரதையாகத் தற்பரிசோதனை செய்து, தன்னிடம் கொஞ்சம் பெருமையோ, தன்னைப் பற்றி எண்ண வேண்டிய

அளவுக்கு மிஞ்சிய எண்ணமோ அல்லது தன்னைக் குறித்த அதிகப்படியான முக்கியத்துவமோ தன்னில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி ஏதாவது காணப்படுமாகில், அது அவனிடமுள்ள மற்றுமோர் பாவமாகும். தேவனுடைய இரக்கத்தையும், மன்னிப் பையும் பெற்றுக் கொள்வதற்கு அதனையும் அவன் அறிக்கை செய்து, விட்டுவிட வேண்டும். அவன் ஜாக்கிரதையுடையவனாகத் "**தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்.**" (ரோம. 12 : 3). "**எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.**" (2 கொரி. 3 : 5). ஒருவனுடைய குற்றங்களை அறிக்கை செய்வதற்கு மனத்தாழ்மை இன்றியமையாததாகும். "**தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார்.**" (1 பேது. 5 : 5, 6). தான் அவ்வாறு நடந்து கொள்ளாமல், தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து, தேவனுடைய மன்னிப்பை அடைந்து கொள்ளுமாறு ஒருவன் எவ்வாறு மற்றவர்களுக்கு வெற்றிகரமாக உபதேசம் செய்யவோ அல்லது செல்வாக்கு செலுத்தவோ முடியுமா? என்ற இந்த கேள்வியை நாம் நம்மையே கேட்க வேண்டும். நாம் யாவருமே ஜாக்கிரதையாக நம்மை ஆராய்ந்து பார்த்து, நாம் மற்றவர்களுக்கு விரோதமாக நடப்பித்த குற்றம் எத்தனை சிறியதாயினும் அதனைக் கண்டுபிடித்து, சம்பந்தப் பட்டவரிடம் சென்று, நம்முடைய குற்றத்தை அறிக்கை செய்து, மன்னிப்புக் கேட்டு, அவரிடம் ஒப்புரவான பின்னர், தேவனிடம் சென்று, அவருடைய துதிகளைப் பாடி, நமது முழுமையான பயபக்தியை அவருக்கு ஏறெடுப்போமாகில், அது தேவனுடைய ஜனங்களின் மத்தியில் எத்தனை மகத்தான சீர்திருத்தமாக இருக்கும்! அப்படிச் செய்வது நம்முடைய பிதாவின் இருதயத்திற்கு எத்தகைய சந்தோஷத்தைக் கொண்டு வரும் !

## (4) அறிக்கை செய்யாத பாவங்கள் ஆவிக்குரிய பலவீனத்தையும், வியாதியையும், நித்திரையையும் கொண்டு வருகின்றன:

"**இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.**" (1 கொரி. 11 : 30). பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய ஜனங்களில் பலர்




**தேவனே அனுதினமும் உம்முடைய வசனத்திலிருந்து கற்றுக் கொள்வதை பயிற்சி செய்ய எனக்கு உதவிசெய்யும்.**

ஆவிக்குரிய பிரகாரமாக நல்ல சுகமாயிருக்கிறார்கள். மற்றவர்களோ பாவங்களைக் குறித்து மனஸ்தாபப் படாது, அவற்றை அறிக்கை செய்யாது, அவை மன்னிக்கப்படாது, அவை கைவிடப்படாததினால் அவற்றை வளர விட்டு, ஆவிக்குரிய பிரகாரமாக வியாதியுள்ளவர்களாகிறார்கள். "**விசுவாசமுள்ள ஜெபம்** (ஆவிக்குரிய) **பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள்.**" (யாக். 5 : 15, 16).

## (5) அறிக்கைச் செய்யப்படாத பாவங்கள் ஜெபங்களுக்குத் தடங்கலாக இருக்கின்றன:

"**பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாக இருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்.**" (யோவா. 9 : 31). "**இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை: கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே, உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.**" (ஏசா. 59 : 1, 2). மனஸ்தாபப்படாத பாவிகளுக்குத் தேவனுடைய எச்சரிப்பையும், புத்திமதியையும் ஏசா. 1 : 15-17-ல் பார்க்கவும், "**நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன். உங்கள் கைகள் இரத்தத்தினால்**

**நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள். உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள். நன்மை செய்யப் படியுங்கள். நியாயத்தைத் தேடுங்கள். ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்**" என்பதே.


அறிக்கை செய்து விட்டு விடப்படாத பாவம் ஒருவன் செய்யும் ஜெபத்தை உண்மையிலே கேட்கக்கூடாதவாறு செய்து விடுகிறது. வாழ்க்கை சம்பந்தமான எல்லாக் காரியங்களிலும், ஒருவனுடைய சொந்த ஜீவியத்திலுங்கூட நடப்பது இப்படித்தான். உதாரணமாக 1 பேது. 3 : 12 வாக்கியத்தைக் கவனிக்கவும். "**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர் களுக்கோ, கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.**" "**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்**" (யோவா. 15 : 7) என்று நமதாண்டவர் வாக்களித்திருக்கிறார். அறிக்கை செய்து விட்டுவிடப்படாத பாவம், நம்முடைய ஜெபத்தை ஆண்டவர் கேட்காதவாறு தடுத்து விடுகிறதுடன், "**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதலையும்**" (யாக். 5 : 16) நாம் அவருக்கு ஏறெடுக்காதபடி தடுத்து விடுகிறது.

### (6) அறிக்கை செய்யாத பாவங்கள் நம்மை பாவத்திற்கு அடிமையாக்கி, இறுதியில் இரண்டாம் மரணத்துக்கு வழிநடத்தும்:

"**ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேது வான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?**" (ரோம. 6 : 12, 16). "**சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கை யாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லுங்கள்.**" (எபி. 3 : 12, 13).

என் அன்பான சகோதரர்களே, நம்முடைய விசுவாசம் அடிக்கடி விசேஷித்த பரீட்சைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. சில வேளைகளில் எல்லாக் காரியங்களும் நம்முடைய விருப்பங்களுக்கும் எதிர்பார்த்தல்களுக்கும் எதிரிடையாக இருப்பது போலக் காணப்படுகின்றன. தேவனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத போதும் அவரிடத்தில் நாம் விசுவாசமாயிருக்க முடியுமா? தரிசித்து நடக்க முடியாதபோது விசுவாசத்தால் நாம் அவருடன் நடக்க முடியுமா? தீங்கு நாளிலே (இப்போது அதில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்) அவைகளை நாம் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயு தவர்க்கம் தரித்தவர்களாக ஆயத்தமாயிருக்கிறோமா? (எபே. 6: 13). விசுவாசத்தின் மூலம் கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கிறாரா? லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத் தினாலும் ஒருவனும் நம்மைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு நாம் அவருக்குள் வேர்கொண்டவர் களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், நாம் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுகிறவர்க ளாயிருக்கிறோமா? "**ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர் களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத் திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக**" (கொலோ. 2 : 6, 7). நாம் இப்போது கற்றுக் கொண்டபடி தேவன் தம்முடையவர்கள்மேல் பிரியம் வைத்து அவர்கள் ஒவ்வொருவரும் ஜெயம் பெற்றவர்களாகும்படிக்கு






அவர்களுடன் கிரியை செய்கிறார். ஜெயம் பெறுவதற்கு நாம் விசுவாசமும், நம்பிக்கையும் அவருடைய ஒழுங்குகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க விருப்பமும் உள்ளவர்களாயிருப்பது தேவைப்படுகிறது. "**தேவனே அந்தகாரத்திலிருந்த நம்மைத் தம்முடைய ஆச்சரியமான அன்பினிடத்திற்கு அழைத்தவர்.**" "**இதினிமித்தம் இவைகளை நீங்கள் அறிந்தும் நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற** (நிகழ்கால) **சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்.**"(2 பேது. 1 : 12).

இப்போது நாம் விசுவாச நேகமத்தில் – விரிவு படுத்தப்பட்டுள்ள சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்போது எல்லாக் கிருபைகளிலும் விசுவாசமே நமக்கு மிக முக்கியமானது. ஏனெனில் அதன் ஸ்தானத்தில் அது மற்றெல்லாக் கிருபைகளின் அஸ்திபாரமாகவும், அவைகளுக்கு சக்தியளிப்பதாகவும் இருக்கிறது. விசுவாசமே ஆதார கிருபை. மற்றவையெல்லாம் அதனுடன் சேர்க்கப்படுகின்றன (2 பேது. 1 : 5–7). "**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**" (1 யோவா. 5 : 4). முதலாவது விசுவாசமில்லாமல் நாம் தேவனிடத்தில் கிட்டிச் சேரமுடியாது. "**ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.**" (எபி. 11 : 6).

## விசுவாசிகளுக்கு மட்டுமே நித்திய ஜீவன்

தேவனுடைய வார்த்தையிலிருந்து பெற்றுக் கொண்ட இந்தப் பாடம் நாம் நம்முடைய தவறான செய்கைகளை (மறைத்து வைக்காமல்) ஒத்துக்கொள்வதின் உண்மையான தேவையை நமக்கு முன் வைக்கிறது. பின்பு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருப்பதோடுகூட நம்முடைய பாவங்களை எவ்வித முறையில் அறிக்கை செய்ய வேண்டும் என்பதின் அவசியத்தையும் நமக்குப் போதிக்கிறது. "**என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்**" என்று யோவா. 5 : 24-ல் இயேசு நம்முடன் பேசுகிறார். தன்னுடைய பாவ வழிகளை விட்டு விட்டு இயேசுவை அவனுடைய இரட்சகராக விசுவாசித்து தேவனுக்குத் தன்னுடைய ஜீவியத்தைப் பிரதிஷ்டை செய்து கிறிஸ்துவின் தலைமையின் கீழ் வந்த பின்பு (எபே. 1 : 9) பரீட்சிக்கப்படும்போது தன்னுடைய பிரதிஷ்டைக்கு உண்மையாயிராத எவனும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள மாட்டான்.

"**எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்**" (1 தீமோ. 4 : 10) [ஆதாமின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து இரட்சித்து (நித்தியமாக அல்ல) சுவிசேஷ யுகத்தில் சபையையும், ஆயிர வருட யுகத்தில் பூமிக்குரிய ஆளுகை ஏற்படுத்தப்பட்ட பின்பு பொதுவான மனுக்குலமனைத்தையும் சத்தியத்தின் சரியான அறிவுக்கு அவர் கொண்டு வருவார். இந்த

இரண்டு யுகங்களிலும் விசேஷித்த கருத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக விசுவாசிகளாயிருப்பவர்கள் மாத்திரமே நித்திய ஜீவனுக்கென்று இரட்சிக்கப் படுவார்கள்.] "**ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்: நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்.**" (வெளி. 21 : 7, 8). "**பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்.**" (யாக். 1 : 15). அப்படியானால் "**நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்திலே சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும்,**" எத்தனை ஆவலுடன் நாம் நம்முடைய பாவங்களை மறைக்காது, அறிக்கைசெய்து, விட்டுவிட வேண்டும்! (எபி. 4 : 16.)

***




## பொல்லாத தோட்டக்காரர்கள் பற்றிய உவமை

**கேள்வி :** பொல்லாத தோட்டக்காரர்கள் குறித்த இயேசுவின் உவமையின் அர்த்தம் என்ன? (மத். 21 : 33-43)

**பதில் :** சுருக்கமாகக் கூறுவதென்றால், அந்த வீட்டெஜமானன் தேவனையும், திராட்சைத் தோட்டம் யூத ஜாதியையும், (ஏசா. 5 : 1-7 ஒப்பிட்டுப் பார்க்கவும்) தோட்டக்காரர் அதின் மத தலைவர்களையும் குறிக்கிறது. ஏற்ற காலத்தில் தேவன் அதில் சரியான கனிகளை பலனாக எதிர்பார்த்தார். ஆனால் அவர்களோ அவருடைய யூத யுக தூதர்களை துன்பப்படுத்தினர். அதின் அறுவடை காலத்தில் அவருடைய குமாரனும் மேசியாவுமாகிய இயேசுவை கொல்ல தீர்மானித்து (ரோமர்களின் மூலம்) கொன்று போட்டனர். (அப். 2 : 23; 3 : 13-17). அதைத் தொடர்ந்து தேவன் அந்த தேசத்தின் மீது அழிவைக் கட்டளையிட்டார். அது கி.பி. 70-73-ல் அவர்கள் மீது வந்த உபத்திரவத்தில் சம்பவித்தது. (மத். 3 : 12; 21 : 6, 7; 1 தெச. 2 : 16). ராஜ்யத்தை அவர்களிடமிருந்து நீக்கி நல்ல கனி தரும் ஜனங்களுக்கு அதனைக் கொடுப்பது என்பது பிரதானமான தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாராக ஆகும் சிலாக்கியம் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு ஆவிக்குரிய இஸ்ரவேலரிடம் கொடுக்கப்பட்டதைக் குறித்துக் காட்டுகிறது. -BS 522

## நாசரேத் LHMM கன்வென்ஷன் 2015

**அக்டோபர் 23,24,25**

**இந்த கன்வென்ஷனில் உற்சாகமாய் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக கர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. எபி. 10 : 24, 25: சங். 33 : 21.**

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*


# Laymen's Home Missionary Movement

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629


**FOR PRIVATE CIRCULATION ONLY**